**செய்தி வெளியீடு எண்: 593** **நாள் : 24.11.2015**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (24.11.2015) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. விக்ரமன், துணைத் தலைவர்கள் திரு.கே.எஸ். ரவிக்குமார் மற்றும் திரு.பி. வாசு, பொதுச் செயலாளர் திரு. ஆர்.கே. செல்வமணி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தைச் சேர்ந்த 64 பேர்களின் தன்னார்வ உடல் தானத்திற்கான உறுதிப் பத்திரங்களை வழங்கினார்கள்.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரபல இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் 62 பேர்கள், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர்கள், என மொத்தம் 64 பேர்கள் இறந்தபின் எரிக்கப்படும் அல்லது புதைக்கப்படும் எந்த பயனும் இல்லாமல் போகும் உடலை மருத்துவ ஆய்வுக்கு பயன்படுத்தி பல நோய்களை குணமாக்கும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும், உடல் தானத்தில் நமது தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ வேண்டுமென்ற பேராவலுடனும், மரணத்திற்கு பின் அரசு பொது மருத்துவமனைக்கு அவர்களது உடலை தானமாக கொடுப்பதற்கு முன்வந்து, அதற்கான உறுதிப் பத்திரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் அளித்து, வாழ்த்து பெற வேண்டும் என்ற மனுவினை தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. விக்ரமன் அவர்கள் வழங்கினார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. விக்ரமன், துணைத் தலைவர்கள் திரு.கே.எஸ். ரவிக்குமார் மற்றும் திரு.பி. வாசு, பொதுச் செயலாளர் திரு. ஆர்.கே. செல்வமணி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தைச் சேர்ந்த 64 பேர்களின் தன்னார்வ உடல் தானத்திற்கான உறுதிப் பத்திரங்களை வழங்கி, வாழ்த்து பெற்றனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 24.11.2015